3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–45

4. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2017–2018, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2017–2018 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உயிரில் உயிராய் கலந்து, எங்களது உணர்வினில் நீக்கமற நிறைந்து, வைகறை விடிவெள்ளி என வழிகாட்டி, வானத்து முழு நிலவாய் ஒளிகாட்டி, அணையாது ஒளிவிடும் ஜோதியின் சுடராக, அரவணைத்துக் காக்கின்ற அன்னையின் வடிவாக எங்களை வழிநடத்திக்கொண்டிருக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)